விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 12 ஷஃபான் 8 இதழ்: 14
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 24-2-1991

## கிளிநொச்சி, மாங்குளத்தில் பொம்மர் கொடூர தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, மாங்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற கொடூரவிமானத் தாக்குதலில் 18 பேர் படுகாயமடைந்தனர். 25 வீடுகள் முற்றாக சேதமடைந்தன.

மாங்குளம் பகுதியில் நண்பகல்ஒரு மணியளவில் மேற்கொண்டதாக்குதலில் 10பேர் படுகாயமடைந்தனர், 10 வீடுகள் தரைமட்டமானது.

கிளிநொச்சியில், ஜெயந்தி நகர், திருநகர்ப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சின் போது 15 வீடுகளுக்கு மேல்சேதமடைந்தன 15பேர் பலத்த காயமடைந்தனர்.

நேற்று காலை 10 மணிமுதல் 12 மணி வரை இருதடவை வந்த இரண்டு விமானங்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## கட்டுவனில் மோதல் பல இராணுவம் பலி

(யாழ்ப்பாணம்)

கட்டுவனிலிருந்து நேற்று முன்தினம் மாலை வெளியேற முற்பட்ட இராணுவம் மீது புலிகள் மேற்கொண்ட 'பசிலன்-2000' தாக்குதலில் படையினர் பலர் பலியானதாக

(4-ம் பக்கம் பார்க்க)

## வங்காலை இராணுவத்தால்

# அதிபர், ஆசிரியர்கள் கொலை; மாணவர் மறியல் போராட்டம்

### பாடசாலைகள் பகிஷ்கரிப்பு

[மன்னார்]

**வங்காலை இராணுவத்தினரால் கடந்தவாரம் அதிபர், ஆசிரியர்கள் ஏழுபேர் கொல்லப்பட்டதைக் கண்டித்து முருங்கன் மகாவித்தியாலய மாணவர்கள் வீதிமறியல் போராட்டத்துடன் காலவரையின்றி பாடசாலையை பகிஷ்கரித்தும் வருகின்றனர்.**

600க்கு மேற்பட்ட மாணவர்கள் மன்னார் வீதிகளில் கடந்த வியாழன் மறியற் போராட்டத்தில் குதித்தனர். தமிழிலும், ஆங்கிலத்திலும் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிறுவன வாகனங்களையும் மறித்து மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர். பொதுமக்களும் குறிப்பாக

(4-ம் பக்கம் பார்க்க)

## பயணிகள் மீது ஹெலி சூடு ஒருவர் பலி; பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

நுணுவில் கண்டி வீதியில் நேற்றுமாலை 5-30 மணியளவில் கொழும்புப் பயணிகளை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த வாகனத்தின் மீது ஹெலிக்கொப்டர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 10 பேர் காயமுற்றனர். ஒருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

இருவர் படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

## ஹெலி கடும் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று காலை ஹெலியிலிருந்து கடும் ஷெல் தாக்குதல் நடைபெற்றது.

## தமிழ் ஊர்காவல் படை; அரசின் முயற்சி தோல்வி

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களை கொண்டு 'தமிழ் ஊர்காவற் படை' ஒன்றை அமைக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளது.

வடக்கு-கிழக்கில் இராணுவத்துடன் இந்த தமிழ் ஊர்காவற்படையும் செயற்படும் விதத்தில் இதனை அமைக்க பலத்த முயற்சி எடுக்கப்பட்ட போதும் இதற்கு தமிழ்க் குழுக்கள் எதுவும் முன்வரவில்லையென பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரில் விமான தளம்

[கொழும்பு]

திருமலை நகரில் இராணுவத்தினருக்கான சிறிய விமானத் தளமொன்றை அமைக்க அரசு முயற்சித்து வருவதாக கொழும்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதற்காக நகர் பகுதியில் தமிழர்கள் வெளியேறிய இடமொன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை திருமலை துறைமுகத்தை விரைவாக புனரமைத்து விடும் சுதந்திரவர்த்

(4ம் பக்கம் பார்க்க)

## இரத்தம் சிந்தா புரட்சி; தாய்லாந்தில் ராணுவ ஆட்சி

(பாங்கொக்)

தாய்லாந்து அரசு நேற்று அதிகாலை இரத்தம் சிந்தா இராணுவப் புரட்சிமூலம் கவிழ்க்கப்பட்டது. பிரதமர் திரு. செக்கிச் சாய் சூ நவான் விமான நிலையத்துக்கு அருகே

(4ம் பக்கம் பார்க்க)

## முத்தமிழ் விழா கேளிக்கையாக அமையாது

(யாழ்ப்பாணம்)

"விடுதலைப் புலிகளின் கலை சாரப் பேரவையின் பத்து

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உங்கள் வியாபார ஸ்தாபன அன்பளிப்பு கலண்டர்கள் பெரிய, சிறிய அளவுகளில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். தேவைகளுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள். தங்கள் தங்கள் விலாசமிட்டும் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீலங்கா அச்சகம், 234 A கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (கி-4382)

### சனி மாற்றம்

எங்கும் விற்பனையாகின்றது. விலை ரூபா 5-00. யுத்தச்செவ்வாயின் 7 மாத வக்கிரமும், சனி ராகுவுடனும், 31-3-91 வரை லக்கிர குருகேதுவுடன் சண்டாள பாவ யோகங்களும் இரத்தக்களரிகளையும், பொருளாதார அழிவுகளையும். இலங்கையில் இனப்படுகொலைகளையும் உண்டாக்கும். Prof. சத்தியதாஸன். ஞானம் ஸ்ரோர்ஸ், சித்தன்கேணி. (கி-4361)

### பரிசு தரும் "அக்கினி"

மீரா வெளியீடான "அக்கினி" நாவலை வாங்கியவர்கள் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பனை உடன் அனுப்புங்கள் குலுக்கலில் (பங்குனி 15-ல்) தெரிவு செய்யப்படும் முதல் பத்து வாசகர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 400/- ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்படும். துர்க்கா சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும் (சி-4383)

## மணல் ஆறு முல்லைத்தீவில்

(முல்லைத்தீவு)

மணலாறு, அளம்பில் பகுதியில் நேற்று முன்தினம் காலை இருபொம்மர்கள் நான்கு குண்டுகளை வீசித்தள்ளின.

இத்தாக்குதலின்போது 4 பொதுமக்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவில் வட்டுவாய்க்கால், தண்ணீரூற்று, முள்ளியவளைப் பகுதியில் 4 குண்டுவீச்சு விமானங்கள் நேற்றுக்காலை மேற்கொண்ட கடும் தாக்குதலில் விக்னேஸ்வரன் புஷ்பம் என்பவர் படுகாயமடைந்தார்.

5 வீடுகள் பலத்த சேதமடைந்தன. (வி-)

## இராசிபலன்

24-02-1991

ஞாயிற்றுக்கிழமை

மேஷம்: நல்லோர் சினேகம், புதியஸ்தானம், குடும்ப மகிழ்ச்சி, புகழ்.

இடபம்: கைப்பொருள் நஷ்டம், பிரயாசம், குடும்ப கவலை.

மிதுனம்: தற்பெருமை, கல்வியால் மேன்மை, காரிய சித்தி, மனநிறைவு.

கடகம்: கலக்கமடைதல், அற்நியர்பகை, தொழில் பாதிப்பு.

சிங்கம்: வித்தை விருத்தி, பயணம், குடும்பசுகம், எதிர்பாராத உதவி.

கன்னி: மனப்போராட்டம், வீண்வம்பு, தானதருமம், தொழிற்கஷ்டம்.

துலாம்: அந்நியவாசம், வயிற்றில் ரோகம், நண்பருதவி, அகாலபோஜனம்.

விருச்சிகம்: கருத்துமோதல், உடல் உபாதை, கடும்சினம், செலவு.

தனுசு: புதிய எண்ணம், தொழில் சிறப்பு, குடும்பத்தில் சுபகாரியம்.

மகரம்: பகை அகலும், தொழில் மாற்றம், குடும்ப அமைதி.

கும்பம்: கற்பனை மிகுதி, அரசியல்பயம், ஏமாற்றம், துன்பமிகுதி.

மீனம்: பணப்புளக்கம், தானதர்மம், புதிய நட்பு, பொறுப்பாளி.

ஜோஸ்யர்

## தகவலில்லை

[யாழ்ப்பாணம்]

மன்னார் தள்ளாடி இராணுவத்தினரால் கடந்த வருடம் டிசம்பர் மாத முற்பகுதியில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவரான வலிகாமம் 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்த பி. மோகனசுந்தரம் (25 வயது) என்பவர் பற்றிய தகவல் எதனையும் பெற முடியாதிருப்பதாக உறவினர்கள் தெரிவித்தனர். (56)

## தொழிலாளர் கல்வி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கல்விப் பாடநெறி மே மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

100 தொழிலாளர்கள்தேர்வு மூலம் தெரிவுசெய்யப்பட்டு மேற்படி பாடநெறிக்கு சேர்க்கப்படவுள்ளார்கள். (153)

# ★ யாழ். குடாவிற்கு வெளியே சுதந்திரதமிழரசு இருந்ததாக சான்றுகள் தெரிவிக்கின்றன'

(யாழ்ப்பாணம்)

"யாழ். குடாநாட்டிற்கு வெளியே சுதந்திர தமிழரசு இருந்ததாக தொல்லியல்சான்றுகள் தெரிவிக்கின்றன" என்று யாழ். பல்கலைக்கழக வரலாற்று சிரேஷ்டவிரிவுரையாளர் திரு. ச. புஸ்பரத்தினம் தெரிவித்தார்.

யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற நாகலிங்கம் நினைவுச் சொற்பொழிவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

கல்லூரி அதிபர் திரு. கே. எஸ். குகதாசன் தலைமையில் இந்த நினைவுச் சொற்பொழிவு நடைபெற்றது.

"யாழ். இராச்சியத்தின் தலைநகரின் புதியநோக்கு" என்ற தலைப்பில் உரையாற்றுகையிலே அவர் மேலும் கூறியதாவது:

ஆரிய சக்கரவர்த்திகளுக்கு முன்னோடியான சுதந்திர தமிழரசு யாழ். குடாநாட்டுக்கு வெளியே அமைந்திருந்ததற்கான தொல்லியல் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு ஈழத்தமிழரசுகளுடைய முன்னோடியான ராஜதானி இருக்கையை பூநகரியுடன் தொடர்பு படுத்தி தற்போது ஆராய முடிகிறது.

"இதுவரை வரலாற்று ஆசிரியர்கள் சிங்கநகர் என்பதை கலிங்கத்துடன் தொடர்பு படுத்தி யாழ். இராச்சியத்தின் தலைநகரான சிங்கநகரின் தோற்றத்தை ஆராய்ந்துள்ளனர். தற்போது சோழகாலத்துடன் தொடர்பு படுத்தி சிங்கநகரை பார்க்கக்கூடிய தொல்லியல் சான்றுகள் எமக்குக் கிடைத்துள்ளன. 10ம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் பராந்தகசோழனின் தலைநகர் சிங்கபுரமென அழைக்கப்பட்டது. இதற்கான சாசன சான்றுகள் உள்ளன.

பூநகரி மண்ணித்தலையில் அடையாளம் காணப்பட்ட சிவாலயத்தின் இடிபாடுகளை அதன் கலைமரபை அடிப்படையாகக் கொண்டு அவை 10ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று காலவரையறை செய்யப்பட்டுள்ளது.

சோழமண்டலம், மட்டுவில் நாடு, கரிக்கோட்டம் இன்றும் பூநகரியிலுண்டு கிராமங்களின் இடப்பெயராக விளங்குகிறது. அத்துடன் நல்லூர் ஆலங்கேணி, பல்லவராயன் கட்டு ஆகியவை இன்றும் ஊர்ப்பெயராக விளங்குகிறது.

பூநகரிப்பகுதியைச் சேர்ந்த தென்னியன்குளம், செழியாவில் பகுதிகளில் கருங்கல் கட்டட அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதிலே பழைய இராஜதானி இருந்ததற்கான தொல்லியல் சான்றுகள் கிடைக்கப்பட்டுள்ளது என்றார். (153)

## சம்பள முற்பணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வித்திணைக்களத்தால் வழங்கப்பட்ட இருவருட சம்பள முற்பணம் 1987 முதல் விமானத்தாக்குதலால் வீடு, மற்றும் உடைமைகள் சேதமானவர்களுக்கு இதுவரை கிடைக்காதது குறித்து மிகவும் கடுமையான புகார் தெரிவிக்கப்படுகிறது.

இருதடவைகள் மேற்படி சம்பள முற்பணம் கடன் பிரஸ்தாப கல்வித்திணைக்களத்தால் வழங்கப்பட்டும் இவர்களுக்கு இது வழங்கப்படாமை சம்பந்தமாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (83)

## ராஜீவ் அவசரமாக ஈரான் விரைவு

(புதுடில்லி)

வளைகுடா போர் குறித்து சமாதான பேச்சுக்கள் நடத்த திரு. ராஜீவ்காந்தி அவசர அவசரமாக ஈரான் செல்லுள்ளார்.

ஈரான் செல்லும் வழியில் மாஸ்கோவில் அதிபர் கொர்பச்சேவை சந்தித்து பேசுவாரெனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்திய வெளியுறவு அமைச்சக குழுவொன்றும் ஈரான் சென்றுள்ளது.

## சாரதிகள், நடத்துனர் மீது இராணுவத்தினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவத்தினர் லொறி சாரதிகள் மீதும் கிளீனர்கள் மீதும் தாக்குதல் நடாத்துவதாக அங்கிருந்து வந்த லொறி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தாக்கப்பட்ட கிளீனர், சாரதிகள் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெறுகின்றனர். (56)

## கறுப்பு உடையினரால் பொதுமக்கள் கைது

(யாழ்ப்பாணம்)

மன்னார் கொண்டச்சியில் அண்மையில் நடந்த சம்பவங்களுக்குப் பின்னர் மன்னார், பேசாலை, தள்ளாடி, தலைமன்னார் போன்ற இடங்களில் வசிக்கும் மக்கள், கறுப்பு உடை அணிந்தவர்களாலும் முஸ்லிம் ஊர்காவற்படையினராலும் நாளாந்தம் கைது செய்துகொண்டுசெல்லப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரைக்கும் 500க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை எவரும் விடுதலை செய்யப்படவில்லை என்று அங்கிருந்து வருவோர் தெரிவித்துள்ளனர். (56)

## இலவச விஷக்கடி சிகிச்சை

(வேலணை)

கைதடி அரசினர் லங்கா சித்தாயுர்வேத வைத்தியசாலையில், திங்கள், வியாழக்கிழமைகளில் இலவச விஷக்கடி வைத்திய சிகிச்சை நடைபெற்றுவருகிறது.

★ **ஈராக்கின் எண்ணெயை**

# குவைத் உறிஞ்சி எடுத்து

# குறைந்த விலைக்கு விற்றது!

உலகத்தை ஆட்டிப் படைக்கும் எண்ணெய்வளம் நிரம்பிய நாடுகள் வளைகுடாவைச் சுற்றியுள்ளன. ஆனால் இந்த அரேபியநாடுகள் தமக்குள் ஒற்றுமையில்லாதிருப்பதால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மேற்குலகநாடுகள் இவற்றிடையே பிரித்தாளும் கொள்கையைப் புகுத்தி எண்ணெய் வள வருவாய்களை சுரண்டிச் செல்கின்றன. இவை ஒருகையால் ஆயுதம், பாரிய இயந்திர சாதனங்கள், வாகனங்கள், ஆடம்பரப் பொருட்கள், உடைகள், இன்னும் பக்கற்றிங்களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்களை வழங்கிவிட்டு அதற்கு மாற்றீடாக எண்ணெய்க் கம்பனிகளை தாங்களே நிர்வகித்து எண்ணெயையும் அதன் வருமானங்களையும் எடுத்துச் செல்கின்றன.

முஸ்லிம் நாடுகள் ஒன்றிணைந்து மேற்குலக நாடுகளிலிருந்து ஆயுதக்கொள்வனவை நிறுத்தி தங்கள் நாட்டு உற்பத்தியில் கவனம் செலுத்துவார்களேயானால் அரபுலகு ஒரு சொர்க்க பூமியாகவும் செல்வந்த நாடுகளாகவும் வளர வாய்ப்புண்டு.

ஆனால் முஸ்லிம் நாடுகளின் ஒற்றுமையைச் சீர்குலைக்கவென உருவாக்கப்பட்டதே இஸ்ரேல். அன்று 1948ம் ஆண்டு உலகெங்கும் சின்னாபின்னப்பட்டு, சித்திரவதைக்குள்ளாகி அகதிகளாக சிதறி வாழ்ந்த யூதர்களுக்கு ஒரு நாடு தேவைப்பட்டது நியாயமே. ஆனால் நாடு கிடைத்த கையோடு அதே இஸ்ரேல் அயல் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் நாடாகி அங்கு வாழ்ந்து வந்த பாலஸ்தீனர்களை நிர்க்கதிக்குள்ளாக்கிவிட்டு அரபுலகின் விரோதத்தையும் சம்பாதித்துக்கொண்டது. இஸ்ரேலின் செயலை பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா மற்றும் மேற்குலகநாடுகள் தட்டிக்கொடுத்து ஒரு குட்டிவல்லரசாக்கியுள்ளார்கள்.

## இஸ்ரேலை எதிர்த்து

தனியொரு முஸ்லிம் நாடு இஸ்ரேலை எதிர்த்து போரிட்டு வெல்லமுடியாத சூழ்நிலை அன்றிலிருந்து இன்றுவரை நிலவுகிறது.

முஸ்லிம் உலகுக்கு தலைமை தாங்க முதல் எகிப்தும், பின் லிபியா, ஈரான் என்ற நாடுகள் வரிசையில் போட்டி போட்டன. இவை இஸ்ரேலை எதிர்த்ததால் அமெரிக்காவைப் பகைத்துக்கொண்டன. அந்நாடுகளின் நடவடிக்கைகள் பின்வாங்கப்பட்டதும், ஈராக் தலைமைவகிக்கப் புறப்பட்டது. தனக்கு ஆபத்தென உணர்ந்த இஸ்ரேல் பாக்தாதின் அணுஉலையை அப்போதே ஆரம்பத்தில் குண்டு வீசி அழித்தது.

**கா. பூபாலசிங்கம்**

இன்னொரு அணுஉலையை ஸ்தாபித்து பல நாடுகளிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவுசெய்து படைபலத்தையும் பெருக்கிக்கொண்டது ஈராக். இன்று உலக வல்லரசுகளிலொன்றான அமெரிக்காவுடன் போர் தொடுத்துவிட்டது ஈராக்.

## ஈராக் போருக்கு...

ஈராக் அமெரிக்காவுடன் போருக்குப் போகவில்லை. ஆனால் அமெரிக்காவே தானாக ஈராக்குடன் போருக்கு வந்துள்ளது. எல்லாம் எண்ணெயில் ஏற்பட்ட மோகமே காரணம்.

குவைத் ஒரு சிறிய நாடு. அது 1961ல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம்பெற்றது. அப்போதே ஈராக் குவைத்தை தன்னோடு இணைக்கவேண்டுமென்று உரிமை கோரியது. அன்று அது சரிவரவில்லை.

குவைத்தின் எண்ணெய் வயல்கள் ஈராக்கின் எல்லையில் அமைந்துள்ளன. ஈராக்கின் எண்ணெயை குவைத்தின் எண்ணெய்க் கிடங்குகளினூடாக உறிஞ்சி அளவுக்கதிகமாக எடுப்பதால் ஈராக் எண்ணெய்வளம் குறைந்தது. இது ஒருவித குவைத்தின் கையாடலாகும். அத்தோடு குவைத் எண்ணெயை, எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் (ஒபெக்) நிர்ணய விலையிலும் பார்க்க குறைந்த விலைக்கு விற்றது. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் இதனால் கூடிய பலனை அனுபவித்தன. இதை முறியடிக்க குவைத்தைப் பிடிப்பதைத் தவிர ஈராக்கிற்கு வேறு வழியில்லை. சாம, பேத, தான முறைகள் பயனற்றுப்போகத் தண்டனையில் குதித்தது ஈராக்.

ஈராக் சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் 2ந் திகதி குவைத்தைக் கைப்பற்றியது. கடும் எதிர்ப்பு அங்கே காணப்படவில்லை. குவைத் அதிபரும், அவரது ஆதரவாளர்களுமாக அநேகர் இரவோடு இரவாகச் சவுதி அரேபியாவுக்குத் தப்பி ஓடிவிட்டனர். குவைத்தில் தொழில் புரிந்த வெளிநாட்டவர் பலர் சவுதி, ஜோர்தான் ஊடாக வெளியேறித் தத்தம் நாடுகளுக்கு ஓடித் தப்பித்துச் சென்றனர்.

## பணயக் கைதிகள்

குவைத்தில் சிக்கியிருந்த பெரும்பெரும் அமெரிக்க, பிரிட்டிஷ் புள்ளிகளைப் பணயக் கைதிகளாக ஈராக் வைத்திருந்தது. அவர்களை யுத்தம் தொடருமுன் சமாதான முயற்சியின்போது கடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று விடுவித்தது.

குவைத்தைக் கைப்பற்றிய ஈராக், அவசரம் அவசரமாக குவைத்தை ஈராக்கின் ஒரு மாகாணமாகப் பிரகடனப்படுத்தி, குவைத் பிரசைகள் எல்லோரும் ஈராக் பிரசைகளாகப் பதியவும் சட்டம் இயற்றியது.

இச்செயல்களை ஆட்சேபித்து பல உலக நாடுகள் கண்டனக் குரல் எழுப்பின. ஈராக்கின் நட்பு நாடுகளும் கேட்டும் விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டது ஈராக்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை கூடியது. ஈராக் குவைத்தைவிட்டு 1991 ஜனவரி 15க்கு முன் வெளியேற வேண்டும் இல்லையேல் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என தீர்மானம் நிறைவேற்றியது.

ஐ. நாவின் பாதுகாவலன் தான் எனக் கூறிக்கொண்டு, அத்தீர்மானத்திற்கிணங்க இராணுவ நடவடிக்கை எடுக்க முற்பட்டன. அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஈராக் நிராகரித்த

# அமெரிக்க காலக்கெடு முடியுமுன்பே பிரான்ஸ் தாக்குதல் ஆரம்பம்

(ரியாட்)

குவைத்திலிருந்து வெளியேற ஈராக்கிற்கு அமெரிக்கா விதித்த நேற்றிரவு 10 30 மணி (இலங்கை நேரப்படி) என்ற காலக்கெடுவையும் மீறி பிரான்ஸ் படைகள் தரைத் தாக்குதலை நேற்று அதிகாலையே ஆரம்பித்துவிட்டன.

சோவியத்தின் 8 அம்ச சமாதான திட்டத்தை நிராகரித்த அமெரிக்கா இறுதி நோக் காலக்கெடு நேற்றிரவு 10-30மணி என ஒன்றை கொடுத்திருந்தது. தரைத் தாக்குதலை ஆரம்பிக்காதிருந்தது எனினும் அதற்கு பல மணி நேரத்திற்கு முன்பே பிரான்ஸ் படைகள் தரைத் தாக்குதலில் ஈடுபட்டன.

## ...நுமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தக வலயமொன்றையும் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (சி)

## தமிழ் ஊர்காவல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் முஸ்லிம் இளைஞர்களை கொண்ட ஊர்காவற்படைக்கு தொடர்ந்தும் ஆட்கள் திரட்டப்பட்டு வருகிறார்களாம். (சி)

## இரத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. நாட்டில் இராணுவச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தரைப்படை, கடற்படை, வான்படை கொண்ட தேசிய அமைதிகாக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. இப்படைகளுக்குப் பொறுப்பான இராணுவ ஜெனரல் நாட்டு மக்களை அமைதியாக இருக்குமாறு வேண்டிக்கொண்டார்.

## முத்தமிழ் விழா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாள் முத்தமிழ் விழா வேடிக்கையாக இருக்கமாட்டாது. போராட்டத்தின் முழுமையான தன்மையைப் பிரதிபலிக்கக் கூடியதாக விழா அமைந்திருக்கும்.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் கலாசாரப் பேரவைப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:- ''முதல் மூன்று நாட்களுக்கும் இயல் துறையிலும், அடுத்த மூன்று நாட்களுக்கு இசைத் துறையிலும், மிகுதி நாட்களுக்கு நாடகமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். இந்த விழா தமிழினத்தைத் தொட்டு நிற்கக்கூடியதாக அமைந்திருக்கும்'' என்றார். (152)

## கிளிநொச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எட்டுக்குண்டுகளை, இரு கிராமங்களையும் நோக்கி வீசின.

காலை 10 மணியளவில் திருநகரில் 2 பொம்மர்கள் 4 குண்டுகளை வீசியதில் 8 பேர் படுகாயமடைந்தனர்; 7 வீடுகள் பலத்த சேதமடைந்தன.

## கட்டுவனில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது.

பலத்த இழப்புகளுடன் முகாம் திரும்பிய படையினர் சுமார் இரு மணிநேரம் துப்பாக்கி, ஷெல் பிரயோகத்தினை மேற்கொண்டனர். [வி]

## ஈராக்கின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐ. நா. தீர்மானத்தை ''வீட்டோ'' அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறுத்தாமல் விட்டது ரஷ்யா இது அமெரிக்காவுக்கு வாய்ப்பாக அமைந்தது. (தொடரும்)

## வங்காலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின் பெற்றோரும் இப்போராட்டங்களுக்கு தங்கள் முழு ஆதரவையும் தெரிவித்துள்ளனர்.

## 28 தமிழர் பலி

இதேவேளை மன்னார் நானாட்டானுக்கு அண்மையில் இராணுவத்தால் கைதான தமிழர்கள் பலர் மிதிவெடிகள்மீது பலவந்தமாக நடக்கவிடப்பட்டு அதில் சிக்கியும் படுகாயமடைந்தும் பலியாகியுள்ளதாகவும், பலர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும், இவர்கள் தொகை 28 எனவும் அங்கிருந்து வந்த பலர் தெரிவித்துள்ளனர். (பு-ன்)


## மரண அறிவித்தல்

### சிவநாயகி தியாகராசா

தெல்லிப்பழை துர்க்காபுரத்தைச்சேர்ந்த சிவநாயகி தியாகராசா 12-2-91 சிவராத்திரி புண்ணிய தினத்தில் சிதம்பரத்தில் சிவபதமடைந்தார். அன்னார் அமரர் சட்டநூலறிஞர் திரு. க. தம்பையாபிள்ளை அவர்களின் அருமைப்புதல்வியாரும், அமரர் இளைப்பாறிய பெரும்பாகக் கல்விப்பணிப்பாளரும், ஸ்ரீ துர்க்காதேவி ஆலய முன்னைநாள் தலைவருமாகிய திரு. சே. தியாகராசா அவர்களின் பிரியபத்தினியாரும், இளைப்பாறிய இராமநாதன்கல்லூரி ஆசிரியை சக்திதேவி அவர்களின் அன்புத்தாயாரும், இளைப்பாறிய ஆங்கில விரிவுரையாளர் பலாலி திரு இ. கந்தையா அவர்களின் அன்பு மாமியாரும், வைத்திய கலாநிதி சுந்தகுமார் [Bromplion Heartling Institute, U. K.], சத்திகுமார் [B. Sc.] Electronics, U. K.], யோககுமார் [U. K.] ஆகியோரின் பாசமுள்ள பேத்தியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியை சிதம்பரத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''சிவநிலையம்'' சக்திதேவி கந்தையா

தெல்லிப்பழை. [மகள்]

(இ 4881)



இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் அச்சகத்தார் ... யாழ்ப்பாணம் ... மேற்கு வீதி, ... இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number ... [illegible]/81.